# இடம் பொருள் கலைஞர்

92

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கிலோ அரிசி ஒரு ரூபாய்!**





# கிலோ அரிசி ஒரு ரூபாய்!

## உணவுத் தேவையில் நிகழ்ந்த புரட்சி!

ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களின் உரிமைக்காகவும், சமூக அடுக்கில் பின்தங்கிய மக்களுக்குச் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், இந்திய ஒன்றிய அளவில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு தான். இந்தியாவிலேயே மனித வளக் குறியீட்டில் முன்னோடி மாநிலமாக இருப்பதற்குக் காரணமும் இங்கு செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள்தான்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகம். அதில் பெரும்பான்மையானவர்கள் நில உரிமை அற்றவர்கள். குறிப்பாக, நிலம் உடைமையாளர்களைச் சார்ந்து பிழைத்து வந்தார்கள். நில உரிமை பெரும்பாலும், உயர் சாதி மக்கள் என்பவர்களிடம் குவிந்திருந்தது. பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் நில உடைமையாளர்களிடம் சார்ந்திருந்தனர். கூடவே, சாதிய அடக்குமுறைகளும் இணைந்து செயல்பட்டதால், பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் குறைந்த கூலிக்குத் தங்களின் உணவுத் தேவைக்காக அன்றாடம் அவமானங்களைச் சுமக்கும் நிலை இருந்தது.

இந்நிலையை மாற்றி, உணவுத் தேவைக்காக, பிறரைச் சார்ந்து பணிந்து வாழும் நிலையில் இருந்து, விடுதலை தந்து அவர்களை தன்மானத்துடன் வாழ்வதற்கு வழி செய்திட்டவர்கள், திராவிட இயக்க முன்னோடிகள். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னரே, உழைக்கும் மக்களின் உணவுத் தேவை தன்னிறைவு அடைந்தது.

1966-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம், உழைக்கும் மக்களைப் பராரிகளாக்கியது. அதிக விலை கொடுத்தாலும், அரிசி கிடைக்கவில்லை. இப்படியான நிலையில்தான், 1967-ஆம் ஆண்டில் தேர்தலைச் சந்தித்த பேரறிஞர் அண்ணா, ஒரு ரூபாய்க்கு மூன்று படி லட்சியம், ஒரு படி நிச்சயம் என்ற வாக்குறுதி அளித்து உழைக்கும் மக்களின் அன்பைப் பெற்றார். அதன்படியே ரூபாய்க்கு படி அரிசி வழங்கும் திட்டத்தையும் தொடங்கினார். ஆனால், உணவுக் கொள்முதல், விநியோகம் ஆகியவற்றில் ஒன்றிய அரசு ஏற்படுத்திய குழப்பங்களால், அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட முடியவில்லை.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த கலைஞர், அந்தக் குழப்பங்களுக்கு விடைகாணும் வகையில், தமிழ்நாட்டில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். உணவுப் பொருள் கடத்தல், பதுக்கல்களைத் தடுத்ததுடன், விவசாயத்தின் நவீன உற்பத்தி முறைகளையும் கொண்டு வந்ததால், உணவு உற்பத்தி அதிகரித்தது. 1971-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒன்றிய அரசின், இந்திய உணவுக் கழகம் தமிழகத்திற்குத் தரவேண்டிய அரிசியின் அளவைக் குறைத்ததும், தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டத்தினை முறைப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்தின என்றும் சொல்லலாம்.

### தொலைநோக்குத் திட்டம்

1972-ஆம் ஆண்டில், இந்திய உணவுக் கழகத்திற்கு இணையாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைத் தோற்றுவித்தார் கலைஞர். அந்த நிறுவனத்தின் வழி, நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழ்நாட்டில் அறுவடைக் காலங்களில் தானியங்களைக் கொள்முதல் செய்து இருப்பு வைக்கத் தொடங்கியது. நெல் தவிர, சர்க்கரை, கோதுமை,பருப்பு, பாமாயில் மற்றும் பிற உணவுப் பொருட்களையும் விவசாயிகளிடமும், வெளிச்சந்தையிலும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யத் தொடங்கியது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தேவைக்காக, நவீன அரிசி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு, அரிசி உற்பத்தித் தடையின்றி நடக்க வழி ஏற்படுத்தியதுடன், அந்த அரிசியை நியாய விலைக் கடைகள் மூலம் பொது மக்களுக்குக் கொண்டு செல்வதற்கான கட்டமைப்பை வலுவாக்கினார் கலைஞர்.

### அரிசி கொள்முதலில் புரட்சி

நான்காம் முறையாக 1996-ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பதவி ஏற்ற கலைஞர், மாதம் இருபது கிலோ புழுங்கல் அரிசி அல்லது பச்சரிசி மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப, நியாய விலைக் கடைகளில் விலைக்கு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தினார்.



இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, அரசு நெல் கொள்முதல் செய்யும் அளவினை அதிகப்படுத்தினார் கலைஞர். 1995-ஆம் ஆண்டு மட்டும், 3 லட்சத்து 36 ஆயிரம் டன்னாக இருந்த கொள்முதல் அளவு

**இந்திய அளவில் முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகிறது என்றால், அதற்கான கட்டமைப்பையும், வழித்தடத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**

இரண்டாயிரமாவது ஆண்டில் 17 லட்சத்து 56 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது. நெல் கொள்முதல் செய்வதன் மூலம், விவசாயிகளுக்கு நேரடி பயன் அமைந்ததுடன், பொது விநியோகத் திட்டத்தில் தங்கு தடையின்றி, அரிசி விநியோகம் செய்யவும் வாய்ப்பு உருவானது. இதன் பயனாகப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கான அரிசிக் கையிருப்பு 10.57 லட்சம் டன்களாக உயர்ந்தது.

விவசாயிகளிடம் அதிக விலை கொடுத்து நெல் கொள்முதல் செய்து, அதனை அரிசியாக பொது விநியோகத் திட்டத்தில் வழங்கும் போது, அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 11.80 காசுகள் என்கிற அளவில் உற்பத்திச் செலவு அமைந்தது. ஆனால், அவற்றை, கிலோ 3.50 ரூபாய் அளவில் வழங்குவதற்காக உத்தரவிட்டார் கலைஞர். இந்த அரிசியை நியாய விலைக் கடைகளில் வாங்குவதற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளவர்கள் என்று எந்த வித்தியாசமும் நிர்ணயிக்கப்படவில்லை.

### இரண்டு ரூபாய்க்கு அரிசி

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்த கலைஞர் அவர்கள், கழகத்தின் வாக்குறுதியாக நியாயவிலைக் கடைகளில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தார். அந்தத் தேர்தலில் கழகம் வெற்றி, கலைஞர் ஐந்தாம் முறையாக முதலமைச்சராக அமர்ந்தபோது, அவரது முதல் கையெழுத்தாக, குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கிடும் ஆணையில் கையொப்பமிட்டார்.

### ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி

2008-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில், நியாய விலைக் கடைகளில் 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டுவந்த அரிசி விலையை ஒரு ரூபாயாகக் குறைத்து, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா கண்ட கனவை, அவரது வழியில் ஆட்சி நடத்திய கலைஞர் நிறைவேற்றிக் காட்டி, தமிழ்நாட்டின் ஏழை எளியக் குடும்பங்களில் உணவுத் தன்னிறைவுக்கு வழி ஏற்படுத்தினார். அந்தத் திட்டத்தை செயல்படுத்தியபோது, 1 கோடியே 85 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெற்றனர். இதனால் அரிசி நுகர்வு அதிகரித்தது. இதன்மூலம் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள், அரிசித் தட்டுப்பாட்டிலிருந்து விடுதலையாகினர்.

இப்படி, படிப்படியாக கொள்கை இலக்குடன், சமூக நல இலக்குடன் கலைஞர் செயல்பட்டதுதான், அவருக்குப் பின் ஆட்சியில் அமர்ந்த ஜெயலலிதா அவர்களுக்கு, கலைஞர் செய்ததைவிடவும் சிறப்பாக செய்யவேண்டும் என்கிற அழுத்தத்தை உருவாக்கி, நியாயவிலைக் கடைகளில் விலையில்லா அரிசி வழங்கப்படும் என அறிவித்தார்.

தமிழ்நாட்டின் நியாயவிலைக் கடைகள் கட்டமைப்பும், உணவுப் பொருள் விநியோகக் கட்டமைப்பும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என இந்திய அளவில் முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகிறது என்றால், அதற்கான கட்டமைப்பையும், வழித்தடத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். கனவு கண்டவர் பேரறிஞர் அண்ணா.

**...வலம் வருவோம்**

## தமிழ்நாடு கொடுக்கிறது! வட நாடு கெடுக்கிறது!

தமிழ்நாட்டின் 100 ரூபாய் அளவிற்கு வரி வருவாயை ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு 29 ரூபாயை தமிழ்நாட்டிற்குத் திரும்ப அளிக்கிறது. மீதம் 71 சதவிகிதம் தமிழ்நாட்டின் வரி வருவாய் பா.ஜ.க. ஆட்சி செய்யும் உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களுக்கு அளிக்கின்றனர்.

இப்படிச் சில மாநிலங்களின் வரி வருவாயை வட மாநிலங்களில் குவித்தும், மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் அம்மாநிலங்கள் வளர்ந்து வருகின்றனவா? என்றால் இல்லை.

மும்பையிலிருந்து வரும் அரசியல் பொருளாதார வார ஏட்டில், பனராஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மூன்று ஆசிரியர்கள் ( பிரியா பார்ட்டா, சௌமியா பார்ட்டா, வினய் குமார்) இணைந்து, இந்தியாவின் 19 மாநிலங்களின் சுகாதாரத்துறையின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து மாநிலங்களுக்கிடையே மருத்துவத் துறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளனர். தாய் சேய் உடல் நலம், இறப்புகள் அரசின் மருத்துவக் கட்டமைப்பு போன்ற முதன்மையான குறியீடுகளை உட்படுத்தி 19 மாநிலங்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

இக்குறியீடுகளில், பா.ஜ.க. ஆதரவோடு முதல்வர் பல்டி குமார் ஆட்சி செய்யும் பீகார் மாநிலம் தான் குழந்தைகள் இறப்பு, வளர்ச்சி அடையாத குள்ளக் குழந்தைகள், இரத்த சோகை, காசநோய் பாதிப்பிற்கு உள்ளானவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர், உத்தரப் பிரதேசம், ஒடிசா, குஜராத் மாநிலங்களில் பீகாருக்கு அடுத்த நிலையில் உள்ளன. உடல் நலப் பாதிப்புகள் குறைந்த மாநிலங்களில் தமிழ்நாடு மட்டுமே எல்லாச் சுகாதாரக் குறியீடுகளிலும் சிறந்து விளங்குகிறது.

குஜராத்தில் ஆறுமாதம் முதல் 59 மாத வளர்ச்சிப் பருவத்தில் உள்ள குழந்தைகள் மிக அதிகமாக அளவில் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கின்றனர் இந்தக் கட்டுரையை எழுதியவர்கள். அந்த ஆய்வாளர்கள் மூவரும் நரேந்திரர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள பனாரஸ் பல்கலைக்கழகத்தின் பணியாற்றுபவர்கள்.

வரி வருவாய் வாரிக் கொடுத்தாலும் அவற்றைக் கல்வி, சுகாதாரத் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யாமல் வட மாநிலங்களில் வாழும் ஏழை ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றி, மானுட வளர்ச்சியைத் தடுத்து வருகின்றனர்.

– பேராசிரியர்.மு. நாகநாதன்

## :ப்ளாஷ்பேக்





பூவை.ரவி

### தலைவர் தளபதியிடம் வாழ்த்து!

1999- ஆம் ஆண்டு நான் வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. அதற்கு சில நாட்களுக்கு முன்புதான் என் தாயார் தவறி இருந்தார்கள், அதை அறிந்து, தளபதி அவர்கள் ஆறுதல் கூறியதை இன்றளவும் மறக்க முடியாது.

**– பூவை.ரவி, முன்னாள் வட்டச் செயலாளர், கோவை மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### குடும்பங்களைக் காத்த கழகம்!

1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடியின்போது, சிறையில் அடைக்கப்பட்ட கழகத் தோழர்கள் பலரின் குடும்பங்கள் மிகவும் ஏழ்மை நிலைமையிலே இருந்தன. அதனால், அவர்களின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் நிதி உதவி வழங்க முடிவு செய்யப்பட்டு, தலைமைக் கழகத்தின் சார்பில், அதனை வழங்க ஏற்பாடும் செய்யப்பட்டது. குடும்பத் தலைவன் இல்லாத நிலையில், அந்தக் குடும்பத்தினரை அப்படியே விட்டுவிடாமல், கழகமே அத்தகைய குடும்பங்களைப் பாதுகாத்திடவும், வழிவகை செய்யப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

646

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131